

# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் தெற்கு & மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ராயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| | மாலை 4.00 மணி | மயிலாடுதுறை | விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |
| 28.05.2025 புதன்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் மத்திய | அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர். |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 2 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 20.05.2025 செவ்வாய்க்கிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மஹால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி.மஹால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 19-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரையாற்றினார்!

# பெரம்பலூர், குன்னம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் – வீ.ஜெகதீசன் – கே.என். அருண்நேரு எம்.பி. – எம். பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*பெரம்பலூர்,மே 20 -*

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர், குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதி தேர்தல் ஆலோசனைக் கூட்டம், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தலைமையில், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப. பரமேஷ்குமார் வரவேற்புரையில், கே.என்.அருண்நேரு எம்.பி., எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மண்டல பொறுப்பாளர் கே.என்.நேரு , போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு 2026ல் சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தா ர்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண்,

மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், அழகு.நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,சன்.சம்பத், நூருல் ஹிதா இஸ்மாயில், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி. மதியழகன், சி.ராஜேந்திரன், ன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ. வல்லபன், ந.ஜெகதீ ஷ்வரன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர்,ஏ.எஸ். ஜாகிர்உசேன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.

முத்தரசன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கவியரசு,

மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ) அப்துல் பாரூக், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எ.ரசூ ல்அகமது, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.ராசா, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கரிகாலன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பி. சி.வி.கார்மேகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், வ.சுப்ரமணியன், ஆர். அருண், மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் ஆர்.சுந்தர்ராஜ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சி.காட்டுராசா, மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வி.சி. ரவி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஆர். அருண்குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம். மணிவாசகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



பத்தாம் வகுப்பு தேர்வில் 500க்கு 497 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் மூன்றாவது இடமும் பெற்ற பெரியபாளையம் பகுதியை சேர்ந்த மாணவி எரினாயாஸ்மின் மற்றும் மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச கராத்தே போட்டியில் வெற்றி பெற்றுள்ள முஹம்மது சாலிம் ஆகியோரை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், நேரில் சந்தித்து வாழ்த்துகள் கூறி உதவித் தொகை வழங்கினார். உடன் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, தமிழ் க.அமுதரசன், அழகிரி சதாசிவம், சி.எச்.சேகர், மு. கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், சுப்பிரமணியம், பா.செ.குணசேகரன், பரிமாள விஸ்வநாதன், டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்த்குமார், மு.மணிபாலன், ஆ.சத்தியவேலு, நா.செல்வசேகரன், நா.பரிமளம், ஜான்பொன்னுசாமி, மு.முரளிதரன், ஜெகதீசன், இரா.அறிவழகன், ஜி.ரவிக்குமார், பி.முத்து, க.சு.தமிழ் உதயன், பா.து.தமிழரசன், இரா.அப்புன் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# விடியலாட்சியை விளம்பிய அழகிய கண்காட்சி !



**மு**தலமைச்சர் அவர்களது கொளத்தூர் தொகுதியிலோர் சாதனை விளக்கக் கண்காட்சியைக் காணும் வாய்ப்பு அமைந்தது. அடடா, செயலூக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போலொரு வீரிய கட்சியை காண்பதரிது எனும் கூற்றை அது மீண்டும் நிரூபித்தது.

அது, மயன் எழுப்பியதா அல்லது மாவட்டச் செயலாளர் எழுப்பியதா எனும்படி மனம் மயக்கியபடி நின்றிருந்தது.

நுழைவு வாசலே ஏதோ ஒரு தியேட்டருக்குள் நுழைவது போல முதலமைச்சரின் நான்காண்டு சாதனை போல - வெகு மிடுக்காக விரவி அமைந்திருந்தது. காரணம், அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களது செயலாற்றல் எனில் அது மிகையாகாது.

***

உள்ளரங்கத்தின் தலைவாசலில் 12,909 திருக்கோயில்களில் ஒருகால பூஜைத் திட்டம் உண்டாக்கியதை ஆவணப்படுத்தி இருந்தார்கள்.

**தமிழ்நாட்டின் துணை முதலமைச்சரும் தி.மு.க.வின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த, முதல்வரின் அந்தச் சாதனை விளக்கக் கண்காட்சியை தனது நீண்ட அனுபவத்தின் வழியே பார்த்துப் பார்த்து பிரமாண்டமாக இழைத்து இழைத்துச் செதுக்கியிருந்தார் அறநிலையத்துறை அமைச்சர் !**

இன்னுயிர் காப்போம், பெண்குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம், அரசாங்கம் ஏற்ற கல்விச் செலவு, பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலன், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், தாய் சேய் நலப் பரிசுப் பெட்டகத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், மகப்பேறு நிதியுதவி, திருநங்கை ஓய்வூதியத் திட்டம் என எண்ணற்ற திட்டக் காட்சிகளை உள்ளடக்கியபடி இறுமாந்து இருந்தது அந்த அரங்கம்!



***

"நாடு போற்றும் நான்காண்டு; தொடரட்டும் பல்லாண்டு" எனும் தலைப்பில் அமைக்கப்பட்டிருந்த அந்தக் கண்காட்சி அரங்கமானது, முதலமைச்சரது கொளத்தூர் தொகுதியின் 64 ஆவது வட்டத்தில் அமைந்திருந்தது.

மொத்தம் 14 வார்டுகளைக் கொண்ட முதல்வரது அந்தத் தொகுதியில் 64 ஆம் வார்டை மட்டும் ஏன் அமைச்சர் தேர்ந்தெடுத்தார் ஏன சிந்தித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போதுதான் சொன்னார்கள் ; அரங்கம் அமைக்கப்பட்டிருந்த அந்த மைதானத்துக்குப் பெயர் "அரிச்சந்திரா மைதானமாம் !"



**ஸ்ரீராம் சர்மா**
எழுத்தாளர் -
இயக்குனர்

"எந்தத் தருணத்திலும் உண்மையை மட்டுமே பேசுவேன். சத்தியத்தின் வழி மட்டுமே நிற்பேன்' எனச் சூளுரைத்தபடி சரித்திரத்தில் நிலைத்து நின்றவரல்லவா அரிச்சந்திரர்.

அவரது பெயர் கொண்ட மைதானத்தில் தமிழகத்துக்கு முதல்வர் ஆற்றிய பணிகளைக் காட்சிப்படுத்துவதே சாலத் தகும் என சொல்லாமல் சொல்லி விட்டார் போல அமைச்சர்.

***

மக்கள் சாரை சாரையாக வந்தவண்ணம் இருந்தார்கள்.

அரங்கத்தில் நிசப்தம் நிலவியது. அமைதியாக ஒவ்வொரு சாதனை விளக்க புகைப்படங்களையும் உள்வாங்கி ஏற்றுக் கொண்டபடியே நிறைவோடு மக்கள் நகர்ந்ததைக் கண்ணுற முடிந்தது.

வெயிலுக்கு இதமாக ஏ.சி. செய்யப்பட்டிருந்த அந்த அரங்கம், முதல்வரின் குளிர்ந்த மனதோடு போட்டி போட்டபடி அனைவரையும் வரவேற்றபடி இருந்தது.

வாசலில், 64 ஆவது வட்டக் கழகச் செயலாளர் மட்டுமல்ல; அருகாமை வட்டங்களின் மொத்த தி.மு.க. முன்னணியினரும் ஒன்றுகூடி இருந்தார்கள். அடுத்து செய்ய வேண்டியது என்ன என்பது குறித்து அமைச்சர் அடிக்கொரு முறை அழைத்து முடுக்கிக் கொண்டே இருக்க பம்பரமாகச் சுழன்றார்கள்.

இன்முகத்தோடு, வந்த மக்கள் அனைவரையும் வரவேற்று நலம்பாடியபடி இருந்தார்கள்.

தி.மு.க. என்பது கட்சி மட்டுமல்ல. அது ஒரு குடும்பம் எனும் சொலவடை ஒன்றுண்டு. அந்தக் காட்சியைத்தான் அங்கே காண முடிந்தது. குறிப்பாக பெண்கள் கூட்டம் அதிகமாக இருந்ததைக் காண முடிந்தது.

வயது முதிர்ந்த ஏழைத்தாய் ஒருவரை அணுகிக் கேட்டேன்.

கண்ணீர் மல்கியபடி சொன்னார், **"சார், எங்க குடும்பத்தில் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் எங்கள் முதலமைச்சரின் ஆட்சியில் பலன் அடைந்துள்ளோம். அந்த நன்றிக் கடனை என்றும் மறக்கமாட்டோம்."**

மக்கள் நலனை முன் வைத்துச் செயல்படும் ஆட்சியை வீழ்த்த எவரால்தான் இயலும் இங்கே?

அந்த அரங்கத்தில் 3 D அரங்கம் ஒன்றை அழகுற அமைத்திருந்தார்கள். அதில் 3 D கண்ணாடியோடு 7 நிமிடங்களுக்கு தரமானதொரு காட்சியைக் காணச் செய்தார்கள். முதல்வரும், துணை முதல்வரும் தோன்றிப் பேசும் Hologram Video க்களையும் தனித்தனி அரங்கமாக அமைத்திருந்தார்கள். காட்சி முடிந்ததும் மக்கள் பலத்த கரவொலி எழுப்பி ஆனந்தித்தார்கள்.

ஆனால், தொழில் நுட்பம் அறிந்தவன் என்னும் முறையில் அதில் ஈடுபட்ட தொழில்நுட்பக் கலைஞர்கள் எனக்குப் பரிச்சயமானவர்கள், திறமைசாலிகள், அருமைத் தம்பிகள் என்பதால், "உங்களால் இதை இன்னமும் கூட சிறப்பாகச் செய்திருக்க முடியுமே ! ஏன் விட்டுக் கொடுத்தீர்கள்?" என உரிமையோடு கேட்டேன்.

அப்போதுதான் சொன்னார்கள், "அமைச்சர் திடுமென ஆணையிட்டு விட்டார். செய்து முடித்தாக வேண்டிய கட்டாயம் எங்களுக்கு. இயன்றவரை செய்து விட்டோம் சார்" என்றார்கள்.

**அவர்களிடம், "அவர் அப்படித்தான். ஒன்றைச் செய்ய வேண்டும் என்று நினைத்தால், அதுவும் முதல்வருக்காகச் செய்ய வேண்டும் என்று நினைத்தால் அசுர குணத்தோடு இறங்கிவிடுவார். அடுத்த கணமே அதன் ரிசல்ட்டை பார்க்கத் துடிப்பார். அடுத்த வாய்ப்பு கட்டாயம் உங்களுக்கு அமையும். அப்போது உங்கள் டீம் ஸ்ட்ரென்த்தை இன்னும் அதிகப்படுத்திக் கொண்டு மேலதிக அருமையோடு செய்து விடுங்கள். வாழ்த்துக்கள்!" என்றபடி நகர்ந்தேன்.**

ஆம், 5000 சதுர அடி கொண்ட அந்த அரிச்சந்திர கிரவுண்டில் வெறும் 52 மணி நேரத்தில் அப்படி ஒரு அரங்கத்தை கட்டி எழுப்பி நிற்க வைத்தது சாதனையாகும். அதனை சாத்தியமாக்கும் வல்லமை தி.மு.க. எனும் செயலூக்கம் கொண்ட கட்சிக்கே உண்டான தனிக்குணமாகும்.

**சுருங்கச் சொன்னால், நோக்கம் - வடிவாக்கம் - செயல்திறன் - வெற்றி என அனைத்திலும் முதலமைச்சரின் தனிக் குணத்தைக் கொண்டதாகவே அமைந்திருந்தது அந்தக் கண்காட்சி.**

இது ஒரு துவக்கம்தான். நாடு நகரமெங்கும் இந்தக் கண்காட்சி தொடரும் என்றார்கள்.

தொடரட்டும்.

தனது உடல் நலத்தையும் பொருட்படுத்தாது மக்கள் நலனை மட்டுமே முன் வைத்து ஓயாது உழைக்கும் முதலமைச்சருக்கு அது அருமருந்தாக அமையட்டும்.

**பேரறிஞர் அண்ணா சொன்னது போல "தீ பரவட்டும் !"** ●